# பரிசுத்த ஆவி!

இந்த நாளிலும் ஒரு புதிய வேதாகம வகுப்பைத் துவங்க கர்த்தர் அருள்புரிந்தார். அவருக்கே துதிகளை ஏறெடுப்போம். கர்த்தரோடு சஞ்சரிப்பதற்கு இந்த வேதாகம வகுப்பு நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். இன்றைய வகுப்பு ஒரு அறிமுகப்பாடமாகத்தான் இருக்கப்போகிறது. வருகின்ற வகுப்புகளில் ஆழமான சத்தியங்களைக் கற்கவிருக்கிறோம்.

இன்றைக்கு உலகத்தில் வெவ்வேறு பிரிவுகளின்கீழ் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் வாழ்ந்துவருகிறார்கள். எல்லா பிரிவினைச் சார்ந்தவர்களுமே பரிசுத்த ஆவியானவரை கனப்படுத்துபவர்களாகவே இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரைக்குறித்து பலர் பாடல்களை இயற்றிப் பாடுகிறார்கள். இன்னும் சிலர் பரிசுத்த ஆவியைக்குறித்து பிரசங்கிக்கவும் செய்கிறார்கள். ஆனாலும் வெகு சிலரே பரிசுத்த ஆவியானவர் யார் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

அநேகர் பரிசுத்த ஆவியை ஏதோ தேவனுடைய ஒரு சக்தி என்று நினைக்கிறார்கள். ஒருசிலர் பரிசுத்த ஆவியென்பது ஏதோ ஒரு மின்சக்தியின் செயல்பாடு போன்றது என்றும், குளிர்ச்சி மிகுந்த காற்றினால் வரும் அமைதி போன்றது என்றும், ஒருவித அக்கினியைப் போன்றது என்றும் பலவாறு எண்ணிக்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் அந்நியபாஷை பேசுவதுதான் பரிசுத்த ஆவி என்றெண்ணிக்கொள்ளுகிறார்கள். அந்நிய பாஷை என்பதே பரிசுத்த ஆவியாகிவிடாது என்பதும், அது பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளில் ஒன்றாயிருக்கிறது என்பதுமே சரி.

ஒரு சிலர் கண்களை மூடிக்கொண்டு, புல்லரிக்கும் அநுபவத்தோடு ஜெபிப்பது தான் பரிசுத்த ஆவி என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். பரிசுத்த ஆவி என்பது ஒரு மனித உணர்ச்சியற்ற ஒர் சக்தி என்பது சிலரது எண்ணமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரை ஒரு நபர் அல்ல என்று எண்ணிக்கொண்டு அது அல்லது இது என்று சிலர் அஃறிணையிலேயே குறிப்பிடுகிறார்கள். வேதத்தில் அவர் அப்படியெல்லாம் அழைக்கப்படாமல் ஒரு நபராகவே கருதப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் தெய்வத்துவத்தின் மூன்றாவது நபராக இருக்கிறார். எப்படி பிதாவாகிய தேவன் ஒரு தனித்துவமான ஆள்தத்துவத்துவமுள்ள நபராக இருக்கிறாரோ, எப்படி தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆளுமையுள்ள ஒருவராக இருக்கிறாரோ, அதுபோலவே பரிசுத்த ஆவியானவரும்கூட ஆளுமையும், பண்புகளும் நிறைந்த ஒருவராகவே இருக்கிறார்.

எவ்வளவாய் நாம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி அறிந்துகொள்ளுகிறோமோ, எந்த அளவுக்கு அவரைச் சார்ந்திருக்க முற்படுகிறோமோ, அந்த அளவுக்கு நாம் அவரிடமிருந்து ஆதாயம் பெறுவோம். நமது வாழ்க்கை வல்லமை மிகுந்ததாயும், வெற்றிகரமானதாயும் அமையும். **“பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்” (சக. 4:6)** என்று வேதம் சொல்லுகிறது.

தேவனுடைய ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் அதிமுக்கியமானது என்றால் அது என்னவாயிருக்கும்? அது பரிசுத்த ஆவியானவரின் கிரியையையும், பங்கையும் அடையாளம் கண்டவர்களாய் நடந்துகொள்ளுவதேயாகும். நாம் நம்மை முழுவதுமாக பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்படைப்பதும், அவரையே சார்ந்திருப்பதும் அத்தியாவசியமானதாகும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், நாம் பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக்கொண்டவர்களாயும், அவருடன் ஒத்துழைப்பவர்களாயும், அவருக்கு ஒப்படைப்பவர்களாகவும் இருக்கவேண்டியது அவசியம் எனலாம்.

எனவே, ஒரு அடிப்படை உண்மை என்ற வகையில், பரிசுத்த ஆவியார் என்பவர் ஆளுமையும், பண்புகளும் நிறைந்த ஒருவரே என்பதை வேதத்திலுள்ள சத்தியங்களை முன்வைத்து நிரூபிக்க விரும்புகிறேன். ஒரு நபரை ஒரு நபர் என்று எவை நிர்ணயிக்கின்றன? மூன்று காரியங்கள் ஒரு நபரை ஒரு நபராக வெளிப்படுத்திக் காட்டுகின்றன. முதலாவது, ஒரு நபர் என்றால் அவர்வசம் சித்தம் என்ற ஒன்று இருக்கும். இரண்டாவதாக, ஒரு நபர் உணர்ச்சிகளைக் கொண்டவராக இருப்பார். மூன்றாவதாக, ஒரு நபருக்கு சிந்தனை அல்லது அறிவுக்கூர்மை என்பது இருக்கும்.

இம்மூன்றும் ஒரு பொருளில் இருக்க வாய்ப்பில்லை. அதுபோல மின்சக்திகூட ஆள்தத்துமில்லாத பொருள்போன்ற சக்தியே. அதில் சித்தமோ, உணர்ச்சியோ, சிந்தனையோ கிடையாது. மனிதர்களாகிய நீங்களும் நானும் சித்தம், உணர்ச்சி, சிந்தனை ஆகியவற்றைக் கொண்டவர்களாக உள்ளோம். பரிசுத்த ஆவியானவரும்கூட சித்தம், உணர்ச்சி, சிந்தனை ஆகியவற்றைக் கொண்டவராகவே உள்ளார்.

**முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் சித்தம் என்னும் ஒன்றைகொண்டவராக உள்ளார்** என்பதை விளக்கும் வேத வசனத்தைப் பார்ப்போம். **“இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்” (1 கொரி.12:11)**. பரிசுத்த ஆவியானவர் அவருடைய சித்தத்தின்படியே தமது வரங்களை பகிர்ந்தளிக்கிறார்.

**“அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு” (அப். 16:6).** இங்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு காரியத்தைத் தடை செய்வதைப் பார்க்கிறோம். பவுலடியார் அந்நாடுகளுக்கு ஊழியத்தின்பொருட்டு செல்லுவதில் பரிசுத்த ஆவியானவருக்கு சித்தமில்லை என்பதாலேயே அவர் தடை செய்கிறார். ஒருவரைப் போக அனுமதிப்பதற்கும், போகவிடாமல் தடை செய்வதற்கும் பரிசுத்த ஆவியானவருக்கு சித்தம் இருப்பதை இவ்வசனம் நமக்குத் தெரிவிக்கிறது. எனவே அவர் தனக்கென்று ஒரு சித்தமுள்ள நபராகவே உள்ளார்.

**இரண்டாவதாக, “அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்” (எபே. 4:30).** அவருக்கு உணர்வுகளும் உண்டு. அவருக்குத் துக்கம் என்னும் உணர்வு உண்டென்பதை இவ்வசனம் சொல்லுகிறது. மனிதர்களாகிய நாம் எப்படி சிலநேரங்களில் துக்கமடைகிறோமோ அதுபோலவே பரிசுத்த ஆவியானவரும் துக்கமடைவார் என்பது இவ்வசனம் மூலம் வெளியாகிறது.

கணவனால் மனைவியுமோ, அல்லது மனைவியால் கணவனுமோ துக்கமடைவதுண்டு. நண்பர்களுக்குள்ளும் ஒருவர் காரணமாக மற்றொருவர் துக்கமடைவதைப் பார்க்கிறோம். அதுபோலவே பரிசுத்த ஆவியானவரும் துக்கம்போன்ற உணர்வுகளை உடையவராய் இருக்கிறார். அவர் துக்கப்படுவார், மகிழுவார் மற்றும் பிரியப்படவும் செய்வார்.

அதுமட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரால் பழிதீர்க்கவும் முடியும். சில நேரங்களில் யாராவது உங்களை ஆழமாகக் காயப்படுத்திவிட்டால் அவர்களை மன்னிக்க முடியாமல் பழிதீர்க்கக் காத்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியானவரும் அவ்வாறு எண்ணம் கொள்ளுவதுண்டு. சிலர் தெரிந்தோ தெரியாமலோ அவரைத் துக்கப்படுத்திவிடுவார்கள். அந்தமாதிரி நேரங்களில் பரிசுத்த ஆவியானவர் ஒருவரை மன்னிக்கக்கூடாது என எண்ணிவிட்டால் அதன்பிறகு மன்னிக்கவேமாட்டார்.

இயேசுவானவர் ஒருமுறை அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திக்கொண்டிருந்தார். அப்போழுது அவரது சத்துருக்கள் அவரைக் குற்றப்படுத்தி ‘அவர் பிசாசின் வல்லமையைக்கொண்டுதான் பிசாசினை விரட்டுகிறார்’ என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டே அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்துவந்தார்.

**“ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.” (மத். 12:21,32)** என்று இயேசுவானவர் அவர்களை எச்சரித்துச் சொல்லுவதை வேதத்தில் பார்க்கிறோம்.

இந்த எச்சரிப்பு அதிர்ச்சியடையச் செய்கிறது அல்லவா? தேவகுமாரனுக்கு எதிராகப் பேசப்படும் எந்த தூஷணமும் மன்னிக்கப்படுமென்றும் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகப் பேசப்படும் தூஷணம் ஒருநாளும் மன்னிக்கப்படாது என்றும் இயேசுவானவரே சொல்லுகிறார். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய அனைவரும் ஒன்றுதானே என்று நீங்கள் ஒருவேளை சொல்லலாம். அவர்கள் ஒன்றுதான். அவர்கள் ஒன்றுசேர்ந்து தெய்வத்துவமாக இருப்பதும் உண்மைதான். அந்த தெய்வத்துவத்திலும், பிதாவும், குமாரனும் மன்னிப்பதுபோல பரிசுத்த ஆவியானவர் மன்னிப்பதில்லை.

இம்மூவருமே தனித்தனியே வெவ்வேறு தெய்வத்துவங்களைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். ஆனாலும் இம்மூவரும் ஒருவராயிருக்கிறார்கள். அவர் தேவன் என்பதால் அவர் விருப்பப்படி காரியங்களைச் செய்யமுடியும். ஒருவராலும் கேள்விகள் எழுப்பமுடியாது. நீங்கள் ஒருவராய் இருப்பதால், ஒரே இடத்தில்தான் இருந்துகொண்டிருக்க முடியும். அவர் அப்படி அல்லவே! அவரால் முப்பரிமாணத்திலே, மூன்று வெவ்வேறு நபர்களாக வெளிப்படமுடியும்.

பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகப் பாவம் செய்யும்போது அவர் துக்கமடைகிறார் என்பதால் நாம் பாவத்திலிருந்து விலகியிருக்க அழைக்கப்படுகிறோம். ஆக, பரிசுத்த ஆவியானவருக்கு உணர்ச்சிகள் உண்டு.

**மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவருக்கென்று ஒரு சிந்தை உண்டு. “ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்” (ரோமர் 8:27).** பரிசுத்த ஆவியானவரால் பிதாவின் சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது. பிதாவின் சித்தத்தின்படியே அவர் பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார். பரிசுத்த ஆவியானவருக்குள் சிந்தை இருப்பதை இங்கு காண்கிறோம்.

பவுலையும், பர்னபாவையும் ஊழியத்திற்கென்று பரிசுத்த ஆவியானவர் எப்படிப் பிரித்தெடுத்தார் என்பதைப் பாருங்கள். **“அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்” (அப். 13:2)**. இங்கு பரிசுத்த ஆவியானவர் தனது சிந்தையை வெளிப்படுத்துகிறார்.

**“ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்” (அப். 8:29)**. பரிசுத்த ஆவியானவர் இங்கு பிலிப்புவுடன் பேசுவதைக் காண்கிறோம். வனாந்தரத்திலே, ஒரு இரதத்தில் பயணித்துக்கொண்டிருக்கும் அமைச்சர் ஒருவருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு பிலிப்புவை இங்கு பரிசுத்த ஆவியானவர் பணிக்கிறார். பரிசுத்த ஆவியானவருக்கு என ஒரு சிந்தை இருப்பதையும், அவர் அந்த சிந்தையை வெளிப்படுத்துவதையும் இந்த வசனம் நமக்குப் புரியவைக்கிறது.

**“ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்” (எபி 3:7)**. எனவே பரிசுத்த ஆவியானவரிடத்தில் அவருக்கென ஒரு சித்தமும், உணர்வும், சிந்தையும் இருப்பதை நாம் பார்க்கிறோம். இன்னும்கூட பல காரியங்கள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி வேதத்தில் எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்பதுபற்றி **(அப். 7:51)** இலும், பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லுவதுபற்றி **(அப். 5:3)** இலும், அவருடன் ஐக்கியம் கொள்ளுவதுபற்றி **(2 கொரி. 13:14)** இலும் நாம் வாசிக்கிறோம். நாம் தேவனிடத்திலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் அன்புகூருபவர்களாக நடந்துகொண்டாலும், அநேக நேரங்களில் நாம் பரிசுத்த ஆவியானவரை அறவே மறந்துபோகிறோம்.

ஒரு ஆராதனையின் முடிவில் போதகர் சபையாரை ஆசீவதிக்கும்போது **‘பரிசுத்த ஆவியானவருடைய அந்நியோன்னிய ஐக்கியமும்’** என்றுதான் சொல்லி ஆசீர்வதிக்கிறார் அல்லவா? ஒவ்வொரு வினாடியும் அவரோடு இணைந்து ஐக்கியம் பாராட்டமுடியும். ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின்போது மட்டும் அவரது நாமத்தை உச்சரித்துவிட்டு, பின்னர் மறந்துபோகிறவர்களாக இராமல் அவரோடு எப்பொழுதும் அந்நியோன்னியமாக ஐக்கியம் கொள்ளவேண்டும். ஒரு நண்பருடன் நடப்பதுபோல அவருடன் இணைந்து நீங்கள் நடக்கலாம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதுபற்றியும், ஒரு மனிதனிலுள்ள சித்தமும், உணர்வும், சிந்தையும் பரிசுத்த ஆவியானவரிடமும் இருக்கிறது என்பதையும் நாம் பார்த்தோம்.

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார். **"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்" (யோவா. 4:24).** நான் ஏற்கனவே சொன்னதுபோல தெய்வத்துக்குள்ளே மூன்று ஆள்தத்துவங்கள் உண்டு. அம்மூவரில் ஒருவரே ஆவியாக இருக்கிறார். அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். **"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரி. 3:17)** என்று வேதம் சொல்லுகிறது.

பரிசுத்த ஆவி என்பது ஏதோ தேவனுக்கு உதவியாயிருக்கும் ஒரு ஆவிதான் என்றும், பரிசுத்த ஆவியே தேவனில்லை என்றெல்லாம் சிலர் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர் தேவனாகவே இருக்கிறார். கர்த்தர் ஆவியாகவே இருக்கிறார் என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார்.

ஒரு நபர் ஒரு நபராக இருப்பதற்கு அவருக்குள் சித்தம், உணர்ச்சி மற்றும் சிந்தை ஆகியவை இருக்கவேண்டும் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அதைப்போலவே தேவன் தேவனாயிருப்பதற்கு மூன்று குணாதிசயங்கள் அவசியமானவை என்பதையும், அவை தேவனுக்குள் இருப்பதையும் நாம் காண்கிறோம். அம்மூன்று குணாதிசயங்களாவன: முதலாவது, பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாக இருக்கிறார். இரண்டாவதாக, அவர் சர்வ வல்லவராக இருக்கிறார். மூன்றாவதாக, அவர் சர்வ வியாபியாக இருக்கிறார்.

## I பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாக இருக்கிறார்:

> **"கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும், தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனைபண்ணினார்?" (ஏசா. 40:13,14).**

தேவன் சர்வ ஞானியாக இருப்பதாலேயே தேவனாக இருக்கிறார். இங்கே ஏசாயா பரிசுத்த ஆவியைப்பற்றிப் பேசுகிறார். அவர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றின வெளிப்பாட்டினை அவர் பெற்றிருக்கிறார்.

ஒருவருமே பரிசுத்த ஆவியானவருக்கு எதையும் சொல்லித்தராமலே, அவர் எல்லாவற்றையும் அறிந்தவராய் இருக்கிறார். அவரே சர்வ உலகத்தையும், அதிலுள்ள ஜீவன்களையும் சிருஷ்டித்தவர். சூரிய, சந்திர, நட்சத்திரங்களனைத்தையும் அவரே சிருஷ்டித்தார். அப்படி சிருஷ்டிப்பதற்கான ஆலோசனையையோ, ஞானத்தையோ ஒருவரும் அவருக்குத் தரவில்லை, ஒருவரும் அவரை அறிவுறுத்தவுமில்லை. அவர் தன் சுயஅறிவினாலும், சுயஞானத்தினாலும், சுயபுரிதலினாலுமே சிருஷ்டிப்பினை செய்து முடித்தார். எனவே, பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாக இருக்கிறார். அவர் சர்வத்தையும் அறிந்தவர். அவர் பிதாவின் இருதயத்தை அறிந்தவராக இருக்கிறார். அவர் உங்கள் இருதயத்தையும் என் இருதயத்தையும் அறிந்திருக்கிறார்.

**"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்" (1 கொரி. 2:10,11)**. அப்.பவுல் தான் எப்படி அந்த வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டார் என்பதை இங்கே தெரிவிக்கிறார்.

நமது ஆவி நம்மைப்பற்றி அறிந்திருக்கிறதுபோல தேவனுடைய ஆவி தேவனைப்பற்றி அறிந்திருக்கும். ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாய், சர்வத்தையும் அறிந்தவராய் இருந்துவருகிறார். எனவே அவரால் போதிக்கவும் கற்பிக்கவும் முடியும். பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்று இயேசுவானவர் சொல்லுவதை **யோவா. 14:26**ல் வாசிக்கிறோம். ஏனெனில் அவர் சர்வத்தையும் அறிந்திருக்கிறார். ஒருவரும் அவருக்குக் எதையும் போதிக்கவேண்டியதில்லை. ஆக, பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாக இருக்கிறார்.

## II பரிசுத்த ஆவியானவர் சர்வ வல்லவராக இருக்கிறார்:

> **"தேவதூதன் அவளுக்குப் (மரியாளுக்கு) பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக். 1:35).**

இங்கே பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை நாம் காண்கிறோம். ஒருமுறை காபிரியேல் தூதன் மரியாளுக்கு முன் தோன்றி அவள் எப்படி கருவுறுவாள்

என்பதையும், தேவ குமாரனை எப்படி அவர் கொண்டுவருவார் என்பதையும் சொன்னான். இந்த காரியம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே செய்யப்படும் என்பதையும் அவன் தெரிவிக்கிறான்.

தன் வசமுள்ள ஜீவனை உருவாக்கும் வல்லமையைக்கொண்டு மரியாளின் கர்ப்பத்தில் தேவகுமாரனை பரிசுத்த ஆவியானவர் உருவாக்கப்போகிறார் என்பதையே அந்த தூதன் அறிவிக்கிறான். பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் என்று அவன் கூறுவதை இங்கு பார்க்கிறோம்.

இயற்கைக்கும், மனித சக்திக்கும் அப்பாற்பட்ட வகையில் பரிசுத்த ஆவியானவர் செயல்படப்போகிறார் என்பதை காபிரியேல் அறிவிப்பதாகவும் இதைச் சொல்லலாம். பரிசுத்த ஆவியாரின் வல்லமையினால் கணவர் யார் என்று தெரியாத நிலையிலேயே மரியாளினால் கருவுற முடியும் என்பதை நாம் இங்கு பார்க்கிறோம்.

சிருஷ்டிப்பின் காலத்திலேயே அவரது வல்லமை கிரியை செய்ததை நாம் பார்க்கிறோம். **“ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்” (ஆதி. 1:1,2)**. வேறொரு ஆங்கில மொழியாக்கத்தில் ‘தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்’ என்பதை ஒரு கோழியானது தன் முட்டைகளின்மேல் அமர்ந்து அடைகாப்பதுபோல சிருஷ்டிப்பின்போது தேவ ஆவியானவர் காட்சியளித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் பின்பே சிருஷ்டிப்பு ஆரம்பமானது.

**“நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்; நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர்” (சங். 104:30)** என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். பரிசுத்த ஆவி அனுப்பப்படுகிறார். அவர் ஜலத்தின்மேல் அசைவாடுகிறார். அதைத் தொடர்ந்து உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்று வேதம் சொல்லுகிறது. ஆக, சிருஷ்டிப்பின்போதே பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்திருக்கிறார். எனவே, பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானியாக இருப்பதுடன், உலகத்தையே சிருஷ்டிக்க சர்வ வல்லவராகவும் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரை வல்லமையின் ஆவி என்று வேதம் சொல்லுகிறது. அவர் வல்லமையின் ஆவி என்று **2 தீமோ. 1:7, அப். 1:8, எபே. 3:16** ஆகிய வேத வசனங்கள்

தெரிவிக்கின்றன. அவர்தாமே இந்த உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் சிருஷ்டித்தார்.

## III பரிசுத்த ஆவியானவர் சர்வ வியாபியாக இருக்கிறார்:

> **“உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.” (சங். 139:7-10).**

அவர் எங்கும் நிறைந்தவராயிருக்கிறார். வீட்டிலும் வெளியேயும் எல்லா இடங்களிலும் உலகெங்கும் அவர் நிறைந்திருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து ஒருவரும் தப்பிக்கமுடியாது. நீங்கள் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கேயும்கூட அவரது சமுகம் இருக்கத்தான் செய்யும். அவர் சர்வ ஞானியாய், சர்வ வல்லவராய், சர்வ வியாபியாய் எங்கும் நிறைந்திருக்கிறார். கர்த்தரே அந்த ஆவியானவர்.

முதலாவது பரிசுத்த ஆவியானவர் சித்தம், உணர்ச்சி, சிந்தை ஆகியவற்றைக்கொண்ட ஒரு நபர் என்று சொன்னேன். இரண்டாவதாக அவர் ஒரு சர்வஞானியாக, சர்வ வல்லவராக, சர்வ வியாபியான தேவன் என்று சொன்னேன். மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவரின் அடிப்படைப் பணிகளைக்குறித்துப் பார்ப்போம். பரிசுத்த ஆவியானவருடைய அடிப்படைப் பணியே கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதுதான்.

“பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை **உண்டாக்குவோமாக**;” **(ஆதி. 1:26)** மற்றும் “பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் **நம்மில் ஒருவரைப்போல்** ஆனான்” **(ஆதி. 3:22)** ஆகிய வசனங்களில் வார்த்தைகள் பன்மையில் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று ஆள்தத்துவங்களுமே ஒரே தெய்வத்துவத்திற்குள்ளாக இருந்து இயங்குகிறார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக்கொண்டும், ஒருவருக்கொருவர் உதவியாயிருந்துகொண்டும், ஆனால் அதே நேரத்தில் ஒரே தெய்வத்துவத்துவமாக இருக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள். அவர் தேவனுக்கு சமமானவராக இருக்கிறார் என்பதை **பிலி. 2:6**-ல் வாசிக்கிறோம். தெய்வத்துவத்திற்குள்ளாக அவர் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் எவ்விதத்திலும் குறைந்தவரல்ல.

**“இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (யோவா8:58).** அதாவது, ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பாகவே தான் இருப்பதாக இயேசு கிறிஸ்து இங்கு சொல்லுகிறார். இயேசு என்றவுடனே சிலர் அவர் 2000 ஆண்டுகளுக்கு முன் வந்தவர் என்றுமட்டும் சொல்லிவிடுகிறார்கள். அவர் நித்தியவாசியாக இருக்கிறார் என்பதே உண்மை. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 2100 ஆண்டுகள் முன்பாக வாழ்ந்தவரே ஆபிரகாம். ஆனால், ஆபிரகாமுக்கு முன்பாகவே தான் இருந்ததாக இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். இதைத்தான் நான் இருக்கிறவராகவே இருக்கிறேன் **(யாத், 3:14)** என்றும், நானே தேவன் **(சங். 30:7)** என்றும் அவர் சொல்லுகிறார்.

எனவே, இயேசு என்பது யார்? அவரே தேவன் என்பதைத் தவிர வேறு யாருமல்ல. **“தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்” (1 தீமோ. 3:16)** என்று வேதம் சொல்லுகிறது. அவரே இயேசு கிறிஸ்து. அதே நேரத்தில் அவர் ஒரு நபராகவும் இருக்கிறார். அவர் தெய்வத்துவத்திற்குள் இருந்தாலும், பிதாவுக்கு சமமானவராக இருந்தாலும், தன் சித்தத்தை முழுவதுமாக பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்.

**“பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்” (லூக். 22:42)** என்று இயேசு ஜெபித்ததை வேதத்தில் பார்க்கிறோம். இந்த வசனத்தில் இரண்டு சித்தங்களைப் பார்க்கிறோம். ஒன்று பிதாவினுடையதாகவும் மற்றொன்றை குமாரனுடையதாகவும் காண்கிறோம்.

இங்கு அவர் இன்னும் சில நொடிகளில் தான் சிலுவையை சந்திக்கவிருப்பதை கெத்சமனே தோட்டத்திலிருந்து தன் பிதாவிடம் ஜெபிக்கும்போது சொல்லுகிறார். இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் என்று இயேசு கெஞ்சுகிறார். அவருடைய ஜெபத்திற்கு பிதாவிடமிருந்து பதில் வரவில்லை. இறுதியில் தன் சித்தத்தை தன் பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தார். எனவேதான் தெய்வத்துவத்திற்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்துக்கொண்டு, உதவி செய்துகொண்டு இருக்கின்றனர்.

தெய்வத்துவத்திற்குள்ளேயே இருந்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்படித் தன்னைப் பிதாவசம் ஒப்புக்கொடுத்திருந்தாரோ, அதைப்போலவே, பரிசுத்த ஆவியானவரும் அந்தத் தெய்வத்துவத்திற்குள்ளேயே இயேசுவானவருக்கு உதவிகள்

செய்து அவரது நாமத்தை மகிமையடையச்செய்யும் பணியைத் தனதாக்கிக்கொண்டார்.

இப்படியாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று ஆள்தத்துவங்களும் ஒரே தெய்வத்துவத்திற்குள்ளாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக்கொண்டும், ஒருவருக்கொருவர் உதவியாயிருந்துகொண்டும், ஒருவருக்கொருவர் உதவிசெய்துகொண்டும் இருப்பதன் ஒரே நோக்கம் மனுக்குலம் மீட்படையவேண்டும் என்பதுதான்.

**"அவர் (பரிசுத்த ஆவியானவர்) என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவா. 16:14).** எவ்வளவு நேர்த்தியாக இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரை அடையாளம் காட்டுகிறார் பாருங்கள். 'அது' என்றழைக்காமல் 'அவர்' என்று இயேசுவானவர் அழைப்பதைக் கவனியுங்கள். அவர் என்றழைக்கப்படுவதால், அவர் ஒரு நபர் என்பது நிரூபணமாகிறது.

பரிசுத்த ஆவியானவர் என்னை மகிமைப்படுத்துவார் என்று இயேசுவானவர் சொல்லுவதால் அதுவே பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகிறது. புதிய ஏற்பாட்டின்படி பரிசுத்த ஆவியானவரின் அடிப்படைக் கிரியையே இயேவின் நாமத்தை மகிமைப்படுத்துவதுதான். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என மூவருமே தெய்வத்துவத்திற்குள் ஒன்றாக இருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் இயேசுவானவருக்கு உதவியாய் இருக்கிறார். 'மனுக்குலத்தின் மீட்புக்காக உம் இரத்தத்தையெல்லாம் சிந்திவிடும்பட்சத்தில். நானோ உம்மை மகிமைப்படுத்துவேன்' என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்.

ஆக, எல்லா நேரத்திலும் பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார். இதை இன்னும் ஆழமாக நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் ஆசிரியர் யார்? முதல் புத்தகமான ஆதியாகமம் முதல் கடைசி புத்தகமான வெளிப்படுத்தல்வரை அனைத்து புத்தகங்களும் யாரை மையமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன? அனைத்தும் இயேசு கிறிஸ்துவையே சுட்டிக்காட்டுகின்றன. இப்புத்தகத்தை எழுதியது யார்? அது பரிசுத்த ஆவியானவரே.

**"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேது.**

**1:20,21).** பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் என்று சொல்லப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்.

எனவே ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை இயேசுவையே மையமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன. எழுதியவர்களையெல்லாம் பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து ஏவிக் கொண்டேயிருப்பதுடன் இயேசுவானவரை மகிமைப்படுத்திக் கொண்டேயுமிருக்கிறார்.

இயேசுவானவர் பூமியிலே ஊழியம் புரிந்தபோதும்கூட பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொண்டே அதனை நிறைவேற்றினார். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, வானங்கள் திறக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கினார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக்கொண்டே அவர் தன் ஊழியத்தில் அற்புதங்களையும் அடையாளங்களையும் புரிந்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே ஊழியம் புரிந்தபோது அவருக்கு உதவியவர் பரிசுத்த ஆவியானவரே. பரிசுத்த ஆவியானவரைக்கொண்டேதான் அற்புதங்களையும் அடையாளங்களையும் புரிந்ததாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே வேதத்தில் சொல்லியிருக்கிறார். அவருடைய பணியை பூமியில் நிறைவேற்றவேண்டும் என்பதற்காக அதே பரிசுத்த ஆவி இன்று உங்களுக்கும் எனக்கும்கூட அருளப்பட்டிருக்கிறது.

**'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவா. 14:16)** என்று இயேசுவானவர் பிதாவினிடத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதகு முன்னர் சொன்னார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், 'நான் உங்களைவிட்டுச் செல்வது உங்களுக்கு நல்லது. நான் செல்லாவிடில் தேவ ஆவியானவர் தேற்றரவாளராக உங்களிடம் வர இயலாது' என்று அவர் சொன்னாதாகச் கொள்ளலாம்.

பின்னர்அவர் சீஷர்களைப் பார்த்து பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருக்குமாறு கூறினார். உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை நீங்கள் தரித்துக்கொள்ளும்வரை எருசலேமிலிருந்து புறப்பட்டுச் செல்லவேண்டாம் என்றும் அவர்களிடம் சொன்னார். அவர்களும் அவ்வாறே காத்திருந்தனர். பெந்தெகொஸ்தே நாளன்று, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உதவியாகக் கொடுக்கப்பட்டிருந்த அதே பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிமேலும் பொழிந்தருளப்பட்டார்.

‘கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் தம் ஆவியை ஊற்றுவார் என்று பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு எழும்பி நின்று சொன்னார். அந்த பரிசுத்த ஆவி மாம்சமான யாவர்மீதும் பொழிந்தருளப்பட்டுள்ளது. மாம்சமான யாவர்மீதும் என்று சொல்லப்படும்போது நம் அனைவர்மீதும் என்றே பொருளாகிறது. நீங்கள் அந்த பரிசுத்த ஆவியைக் கேட்டுப்பெற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்கள்மூலமாகக் கிரியை செய்து கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதுடன் உங்களில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கச்செய்வார். உங்களை மகிமைக்குமேல் மகிமையடையச்செய்வார்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து அவர் மரணிக்கும்வரை பரிசுத்த ஆவியானவரே அவருக்கு ஒத்தாசையாயிருந்தார். பரிசுத்த ஆவியின் வல்லமையினாலேயே அவர் மரியாள்மூலமாக உலகத்தில் பிறந்தார். பரிசுத்த ஆவியின் வல்லமையைக்கொண்டே இயேசு கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்தார். நித்திய ஆவியினாலே அவர் தம் பாவமற்ற இரத்தத்தை பூமியில் சிந்தினார் என்று வேதம் சொல்லுகிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையே அவரை மரித்தோரிலிருந்து எழுந்தருளச்செய்தது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின அதே பரிசுத்த ஆவியானவர் மரணத்துக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் என்று வேதம் சொல்லுகிறது. இயேசுவானவருக்கே பரிசுத்த ஆவியானவர் இவ்வளவாய் தேவையாயிருக்கிறார் என்றால் உங்களுக்கும் எனக்கும் அவர் எவ்வளவாய் தேவைப்படுகிறார்!

……………………………………………………………………………………………………